
பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
"தேவரீர் சகலத்தையும்
செய்யவல்லவர்;
நீர் செய்ய நினைத்தது
தடைபடாது" ....
யோபு – 42:2
செய்தி மலர்
2015
மார்ச்
இதழ் : 10
மலர் : 15



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்

தேவனுடைய பெரிதான கிருபையால் 2015—ம் வருடத்தின் மூன்றாவது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை நம் ஒவ்வொருவருக்கும் தேவன் தந்தபடியால் நன்றியுள்ள இருதயத்துடன் தேவனை ஸ்தோத்திரிப்போம் .

கடந்த மாதம் நம்முடைய சபையின் ஆராதனைகள் ஊழியங்கள், மற்றும் நம் குடும்பத்துடனும் தேவ பிரசன்னமும் வழி நடத்துதலும் இருந்தபடியால், தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

யோபு கர்த்தரை நோக்கி "**தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.**(யோபு 42:1,2)என்று அறிக்கை பண்ணுகிறான். நமது சபையின் வாக்குத்தத்தத்தின்படி **நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடு இருப்பார்** என்பதை போல் இந்த மாதத்திலும் அவரை பார்த்து , **தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர் என்று சொல்லுவோம்.**

யோபு தன்னுடைய சோதனையின் முடிவில் "**நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்,** என்றார்.

யோபு தனக்கு வந்த சோதனையில் சில நேரங்களில் தேவன் மேல் முழு விசுவாசத்தையும் வைக்கிறான். சில நேரங்களில் அலப்புகிறான், ஆனபடியால் யோபு சொல்லும் போது "நான் **எனக்கு தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும்,** அலப்பினேன் என்கிறான் (யோபு 43:3)

பிரியமானவர்களே ! நாமும் கூட இப்படியாக யோபுவை போல் **நமக்கு தெரியாத காரியங்களை** குறித்து அலப்பி இருக்கலாம். எனக்கு எல்லாம் தெரியும் என்று பேசி இருக்கலாம். இந்த வாழ்க்கையில் நாம் தெரிந்த கொண்டதை பார்க்கிலும், தெரிந்து கொள்ள வேண்டியது ஏராளம் உண்டு. எல்லாவற்றையும் தெரிந்தவர் தேவன் ஒருவரே. குடும்ப வாழ்க்கையில், ஆவிக்குரிய வாழ்க்கையில், மற்றவர்களோடு நமக்கு இருக்கும் உறவுகளில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை உண்டு, அதை எல்லாவற்றையும் தெரிந்து தேவனிடம் கேட்க வேண்டும். நித்தமும் அவர் நமக்கு கற்று கொடுப்பார்.

## தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்.

யோபு தேவனை குறித்து அவர் சகலத்தையும் செய்ய வல்லவர் என்று சொல்லுகிறான். எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருக்கும்போது, உடலெல்லாம் நாற்றமெடுத்த சூழ்நிலையில் தேவனை துதிக்கிறான். தன் பிழைகளை உணரும் போது தேவன் தன்னை வெளிபடுத்துகிறார்.

இப்பொழுது என் கண் உம்மை காண்கிறது" யோபு 42:5 என்று யோபு சொல்லுகிறான். சர்வவல்லவரை பார்க்கும் போது தன்னுடைய நிலையை யோபு மறந்து, தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன், என்று ஆவர் மேல் தன் விசுவாசம் முழுவதையும் வைக்கிறார். ஆனபடியால் யோபு இழந்த எல்லாவற்றையும் மாத்திரம் அல்ல இரட்டத்தனையாய் எல்லாவற்றையும் நிரப்பி கொடுத்து யோபுவை தேவன் ஆசீர்வதிக்கிறார்.

பிரியமானவர்களே! உங்கள் நிலைமை எப்படி உள்ளது, நம் தேவன் எப்படிபட்ட நிலையிலும் நம்மை ஆசீர்வதிக்க முடியும். எவ்வளவு காரியங்களை இழந்து இருந்தாலும். ஒரு வேளை தேவனுடைய ஊழியத்தின் நிமித்தம் இழந்து இருந்தாலும் உங்களை இரட்டத்தனையாய் ஆசிர்வதிக்க தேவனால் முடியும், நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பது, நம்முடைய பிழையை உணர்ந்து தேவனிடம் நம்மை தாழ்த்த வேண்டும். யோபுவை காட்டிலும் நாம் நீதிமான் அல்ல, யோபுவே தன்னுடைய குற்றங்களை ஒத்துக் கொள்ளும் போது, நாம் எம்மாத்திரம். நம்முடைய பாவங்களை சுமந்து, சிலுவையில் ஜீவன் தந்த, உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு, உங்களை ஆசீர்வதிக்க வல்லவராய் இருக்கிறார் என்று சொல்லுவோம். விசுவாசிப்போம்

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக !

கிறிஸ்துவின் பணியில்

அன்பு சகோதரன் R.ரவிச்சந்திரன்

திக்கற்ற பிள்ளைகளின் ஊழியப்பொறுப்பாளர் –சகோ. எபிநேசர் (66857827)
இந்திய தேச மிஷனரி ஊழியப்பொறுப்பாளர் – சகோ. ஆரோக்கியராஜ் (66159784)
போக்குவரத்து ஊழியப்பொறுப்பாளர் – சகோ. வில்ஸன் (99259975)

# விசுவாசிப்பது எப்படி

## விசுவாசம் என்றால் என்ன ?

விசுவாசமாவது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரேயர் 11: 1) என்று வேதம் கூறுகிறது. நமது கண்களால் காணாதபோதிலும் வேதத்தில் கூறப்பட்டிருப்பதால் அவற்றை உண்மை,நிச்சயம் என்று நம்புவதும்,அந்த நம்பிக்கையில் உறுதியாயிருப்பதுமே விசுவாசம். நம் சுயபுத்தியின் மேல், உணர்ச்சிகள் மேல், அறிவின் மேல், சூழ்நிலைகள்மேல், மனிதனின் வார்த்தைகளின்மேல் சாயாமல், முழு இருதயத்தோடும் கர்த்தர் மேல்நம்பிக்கையாய் இருக்கவேண்டும். அநேக நேரங்களில் நம்முடைய உணர்ச்சி, அறிவுபலவித காரணங்கள், சூழ்நிலைகளைக் கொண்டு விசுவாசம் வைக்கிறோம், இது உண்மையான விசுவாசம் ஆகாது.

யோசுவா 6:1ல் இருந்து 21ல் இஸ்ரவேலர்கள் எரிகோவை சுற்றி வந்தது உணர்ச்சியின் படி அல்ல. ஒரு மதிலை சுற்றி வந்து சப்தம் செய்தால் அது இடிந்து விழாது, என்பது உணர்ச்சியும், சுய புத்தியும் சொல்பவை. ஆனால் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்படிந்ததால் எரிகோ மதில் விழுந்தது. நாம் காணாதவைகளையும் நம்புவதுதான் விசுவாசம் (ரோமர் 8:24,25)

<u>நாம் எந்த விதத்தில் விசுவாசிக்க வேண்டும்?</u>

வேதத்தில் கூறி இருப்பவை தேவனுடைய வார்த்தைகள், அவற்றை அப்படியே நம்பவேண்டும் அதற்கு எதிரான எண்ணங்களை நாம் அகற்றிவிட வேண்டும். (II கொரி10:5) ஆபிரகாம் தன்னுடைய சரீரமும், சாராளின் கர்ப்பமும் செத்து போயிருந்தாலும் அதை எண்ணாமல் விசுவாசித்தான் என்று (ரோமர்–4:19)ல் வாசிக்கிறோம். இதுபோலவே நம் உணர்ச்சியையும் சூழ்நிலைகளையும் பார்க்கக்கூடாது. நம்முடைய மனதை தேவனுடைய வாக்குத்தத்தங்களால் நிரப்பவேண்டும். அவருடய வசனத்தை தியானித்து, உரிமையோடு சுதந்தரித்துக் கொண்டு, அதை வாழ்க்கையில் கடைபிடித்து அதையே அறிக்கை செய்ய வேண்டும் (II கொரி 1:20)

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களை சந்தேகப்படாமல் அவற்றை நிறைவேற்றுவார் என்று நம்பி தேவனை துதிக்க வேண்டும். ஒரு காரியத்திற்காக நாம் நன்றாக ஜெபித்தபின் வேதத்தில் உள்ள வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொண்டு அவரை மகிமைபடுத்த வேண்டும் (ரோமர் 4:20,21)அப்பொழுது கர்த்தர் தம் வாக்கை நிறைவேற்றுவார், நம்முடைய ஜெபங்களும் கேட்கப்படும். நாம் பெற்றுக் கொண்டோம் என்று விசுவாசித்து துதிக்க வேண்டும், மேலும் அவரின் கட்டளைகளுக்குக் கீழ்படியவேண்டும்.

## விசுவாசத்தை எப்படி பெறுவது?

தேவனுடைய வசனத்தை வாசித்து தியானித்து நன்றாக மனதில் தக்க வைக்க வேண்டும் (ரேமார் 10:7)இது ஆவியின் கனிகளில் ஒன்று (கலா 5:22)இதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற வேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வார், நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீதே நம் கண்களை பதிக்க வேண்டும் எபி 12:1. எந்த மனிதனையும் நாம் பார்க்கக்கூடாது. இயேசு தோமாவிடம் கண்டுவிசுவாசிப்பதை விட காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். மேலும் தம்மிடம் சுகத்திற்காக வந்த அநேகரிடம் உன் விசுவாசத்தின் படியே உனக்கு ஆகக்கடவது என்றார் அவர்கள் அவரை விசுவாசித்து சுகம் பெற்றார்கள்.

## நாம் விசுவாசிப்பதால் என்ன நன்மை?

விசுவாசத்தை கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம் (எபே2:8) பாவத்திற்கு மனஸ்தாபப்பட்டு அறிக்கையிடுகிறோம். கர்த்தர் மன்னிப்பார் என்று விசுவாசித்து இவ்விதம் செய்கிறோம். அவரும் மனமிரங்கி மன்னிக்கிறார். நம் உள்ளத்தில் சந்தோஷமும் சமாதானமும் உண்டாகிறது (ரோமர் 15:13). இவ்விதம் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று வாசிக்கிறோம்(ஆப 2:4) விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுகிறோம்(யோ 7:38) அபிஷேகத்திற்காக ஜெபிக்கும் பொழுதோ, அல்லது மற்றவர்கள் நம்மீது கைகளை வைக்கும் பொழுதோ இப்பொழுதே கர்த்தர் என்னை அபிஷேகிக்கிறார் என்று விசுவாசித்து கர்த்தரை துதிக்க வேண்டும் அப்பொழுது கர்த்தர் நிரப்புவார். விசுவாசத்தினால் நமக்கு பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைக்கிறது (தானி 6:23) (மத்தேயு 6:25) (தானி 3:17-26) தானியேலும் அவன் நண்பர்களும் கர்த்தரை விசுவாசித்து உயிர் பிழைத்தார்கள். விசுவாசித்து ஜெபிக்கும் போது பதிலை பெறுகிறோம் (மத்தேயு 21:22)
அற்புத அடையாளங்கள் நம்மூலம் நடைபெறும் மத்தேயு 17:20 மாற் 16:17,

விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும் மாற் 9:23. வெற்றி வாழ்க்கை வாழலாம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்(1யோ 5:4) எபே6:16) ஆகையால் கர்த்தர் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு பலனளிக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி 11:6) விசுவாசத்தினாலே வராத எதுவும் பாவமே.(ரோ 14:23) நாம் கர்த்தர் மீது உறுதியான, உண்மையான விசுவாசம் வைத்து வெற்றி வாழ்க்கை வாழ ஜெபிப்போம் கர்த்தர் உதவி செய்வாராக!.

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரன்

# ஒரு குடம் நிறைய எண்ணெய்

தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு பெண்....?

அவளின் பெயர் சொல்லப்படவில்லை

பரிசுத்த வேதாகமத்தில் நல்ல சமாரியன், இளைய குமாரன், நாகமானின் மனைவி முக்கிய நல்லவர்களின் பெயர்கள் சொல்லப்படவில்லை. அநேகர் பேருக்காக விளம்பரங்களுக்காக கோடி கோடியாய் செலவிடுகிறார்கள்.

ஒரு கிராம சபையின் கோயிலில் உள்ள டியூப் லைட்களில் "நேசமணி பொன்னையா" என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது அந்த ஆலயத்திற்கு வருகை தந்த ஒரு ஆங்கிலேயர் அதை "நாசமா நீ போனியா" என்று வாசித்தாராம்.

ஆண்டவரின் நாமம் பெருகவும். நம் பெயர் சிறுகவும் வேண்டும்

சிலர் தங்கள் சுய விளம்பரத்திற்காக ஆலயத்தை உபயோகித்து கொள்கிறார்கள்.

திர்க்கதரிசியின் பிள்ளையாகிய இருவரும் இனிய குடும்ப வாழ்க்கை நடத்தினார்கள்.ஆனால் அவர்களுக்குக் கடன் ஏற்பட்டது, அன்பினாலன்றி வேறொன்றிலும் கடன்படாதிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது.

பின் ஏன் கடன் ஏற்பட்டது?

ஏதோ குறைபாடிருந்தது

திட்டமிடப்படாத வரவு செலவு, அல்லது இருவரும் அமர்ந்திருந்து ஆலோசித்துச் செய்யாத செலவீணம்.

தீர்க்கதரிசியின் புத்திரன் இறந்து போனான். அவள் இளம் விதவையானாள்.

வேதத்தில் விதவைகள் பலர் நற்சாட்சியுள்ளவர்களாக விளங்குகிறார்கள்.

1. சாரிபாத் விதவை – மறக்கமுடியாத பெண்
2. நாயினூர் கைம் பெண்– நம் நினைவை விட்டு நீங்காத பெண்
3. வேத நூலில் வரும் அந்த விதவைக்கு கடன் கொடுத்தவனோ கொடிய நீசன் – கந்து வட்டி வாங்கும் கயவன்.

இன்றும் வட்டிக்கு மேல் வட்டி வாங்கி மாடிக்கு மேல் மாடி கட்டும் மாபாதகர்கள் இருக்கிறார்கள்.

ஒரு நாள் அந்த கடங்காரன் கடுமையான கெடு விதித்தான்.

நாளைக்கு பணம் தராவிட்டால் நீயும் உன் மகன்களும் எனக்கு அடிமைகள். என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டான்.

தாலந்தை புதைத்து வைத்தவனை பார்த்து நம் ஆண்டவர் பணத்தை ஏன் கூடுதலாக்கவில்லை என்று கேட்டார் (மத் 25:27)

தங்கள் தாலந்தை விருத்தி செய்யாதவர்கள் கடன் வாங்ககூடாது, மூலதானத்தை முடக்குவது முட்டாள்தனம். ஒன்றை பத்தாக்க தெரியாதவர்கள் கடன் வாங்கி மாட்டிக்கொள்ள கூடாது.

தமக்கு பிரச்சனைகள் வரும் போது என்ன செய்கிறோம்

உலக மக்களிடம் ஓடுகிறோம். பிரச்சனை இன்னும் சிக்கலாகிறது. தீர்க்கதரிசியின் மருமகளான விதவை எலியா தீர்க்கதரிசியிடம் ஓடுகிறாள். தேவ மனிதனிடம் சென்றாள்.

அவர் இரண்டு கேள்வி மட்டும் கேட்டார்.

1.நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்.?

2.உன்னிடத்தில் என்ன இருக்கிறது.

அவளிடம் ஆடுமாடு இல்லை வேறு சொத்தும் இல்லை
ஒரு குடம் என்ணெய் மட்டுமே உண்டு
அது ஒன்றுதான் அவளுடைய ஜீவனுக்கான மூலதானம்.

எலிசா தீர்க்கதரிசி சொன்னார் அப்பொழுது அவன்: நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும்பாத்திரங்களைக் கேட்டுவாங்கி, உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்கிறார். பாத்திரம் இல்லாத போது எண்ணெய் ஊற்றும் நின்றுவிட்டது.

போதும் என்ற அளவு மட்டும் எணணெய் பிடித்து கொண்டார்கள்.

பேராசை இல்லை, போதுமென்ற மனமிருந்தது.

கடன் அடைபட்டது அண்டை வீடுகளுக்கும் எண்ணெய் கொடுத்தார்கள், பின்பு கடன் படாதிருந்தார்கள்

## இறுதி:

அப்படியே அவள் மகிழ்ச்சியில் மறந்து விடவில்லை. நன்றி கெட்ட ஒன்பது குஷ்டரோகிகளை போல இருந்து விட வில்லை

எலியா தீர்க்கதரிசியிடம் ஓடியாள், நன்றியை தெரிவித்தாள் மீதியை என்ன செய்ய என்று கேட்டாள், உன் ஜீவனத்திற்கு வைத்துக்கொள் என்றார் .

அவள் கடன் கொடுக்கிறவளாகவும். விருந்து பண்ணுகிறவளாகவும் விளங்கினாள்.

எண்ணெய் பரிசுத்த ஆவியை குறிக்கிறது. அவளிடம் வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும் இதயமாகிய பாத்திரம் பரிசுத்த ஆவியால் நிரம்பி வழிந்தது.

அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.(ஆபகூக் 3:17,18)

## ஜெப வீரராக விளங்க சில ஆலோசனைகள்

(கடந்த மாத இதழின் தொடர்ச்சி)

## தியானியுங்கள்! ஜெபியுங்கள்!

பல சபைகளை ஸ்தாபித்த அநேக பரிசுத்தவான்கள் கூறும் ஒரே தாரக மந்திரம் என்னவென்று கேட்போமானால் அவர்களின் பதில் "இடைவிடாது ஜெபம்" என்று சொல்கிறார்கள். இரண்டு மூன்று நாட்கள் கூட உணவில்லாமல் இடைவிடாமல் ஜெபம் பண்ணுவேன் என்றும், பெரிய பெரிய கன்வென்ஷன் என்றால் உபவாசத்தில் தரித்திருப்பேன் என்று கூறுவதையும் பார்த்தும், கேட்டும் இருக்கிறோம்

மேலும் அவர்களிடம் பேசும் பொழுது நீண்ட நேரம் எப்படி உங்களால் ஜெபிக்க முடிகிறது? ஜெப ஆவியை பெற்று கொள்ள நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று அவர்களை கேட்ட பொழுது அவர்கள் சொன்னது.

கல்வாரி அன்புதான் நம்மை நெருக்கி ஏவக்கூடியது. நான் ஜெபிக்க ஆரம்பிப்பதற்கு முன் சிலுவையின் பாடுகளையெல்லாம் ஒவ்வொன்றாக தியானம் செய்வேன். கிறிஸ்துவின் காயங்களை கண்ணீரோடு நோக்கி பார்த்து "எனக்காக அல்லவா" என்று என்று நினைத்து கண்ணீர் சிந்துவேன். இது என் உள்ளத்தில் நேச அக்கினியை பற்ற வைக்கும். பின்பு பலமணி நேரங்கள் தொடர்ந்து ஜெபிப்பேன் என்றார்.

ஆம் பிரியமானவர்களே ஜெபிப்பதற்கு எத்தனை அருமையான வழி.

ஜெபமும் தியானமும் ஒன்றுக்கொன்று இணைந்தது ஒன்றையொன்று ஊக்குவிக்க கூடியது ! வேதத்தை தியானித்து விட்டு ஜெபியுங்கள். உங்க ஜெப நேரம் இன்பமாயிருக்கும். ஜெபித்துவிட்டு தியானியுங்கள், உங்கள் தியான நேரம் பரவசமாயிருக்கும்.

தாவீது ராஜா சொல்கிறார் எனக்குள்ளே அனல் கொண்டது, நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது, அப்பொழுது நான் என் நாவினால் விண்ணப்பம்செய்தேன். (சங் 39:3)

தேவ பிள்ளைகளே கல்வாரி அன்பை தியானம் செய்! அவருடைய தியாகத்தின் மேன்மையை தியானம் செய்.அவருடைய ஐங்காயங்களையும் ஆழமாய் தியானஞ்செய், ஜெப ஆவி உன்னில் பொங்கி வரும்.

அடுத்த இதழிலும் தொடரும்

**2015 ஆம் ஆண்டு சபையின் வாக்குத்தத்தம்**

*........நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.*

*ஆமோஸ் 5:14*

**தாங்கள் நேர்ந்து கொண்டு ஒப்புகொடுத்த காணிக்கைகளை அதற்கென பொறுப்பில் இருக்கும் பொருப்பாளர்களிடம் கொடுத்து மறக்கமால் ரசீதிகளை பெற்றுக் கொள்ளவும்**

# 2015 – பிப்ரவரி மாத விடைகள்

1. அந்தப்படி, இளைஞரே, …….பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

( 1 பேதுரு 5:5)

2. கர்த்தர் ( யூதா 1:15)

3. (யோவான் 5: 17, 21)

4. ( 1 பேதுரு 1:17)

5. (1 யோவான் 1 : 8)

6. ( 1 பேதுரு 3: 9 )

7. (3 யோவான் 12)

8. ((1 யோவான் 3: 14))

9. (3 யோவான் 11)

10. (1 யோவான் 4:20)

11. ( 1 பேதுரு 2: 9 )

12. (2 யோவான் 1:6)

13. ( 1 பேதுரு 2: 8 )

14. ( 1 பேதுரு 1: 9 )

15. (1 யோவான் 2:9)

## 2015 பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி

Sis. ஜோன் அசோக்குமார்

Sis. சுகந்தி தம்புக்குமார்

Sis. மரகதம் ஸ்டீஃபன்

Sis. மெர்சிலின் தயா ஏசுரெத்தினம்

Sis. லதா கிறிஸ்டோபர்

Sis. மரியா குளோரி தாஸ்

Sis. பிரியா பிரேம்குமார்

Sis. செலின் டேவிட்

Sis. சோபியா மேஷாக்

Sis. மேரிகலா ஜெயகுமார்

Bro. ஜாண்சன்

Bro. ஆல்பர்ட்

Bro. ஜாண்

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வி. திவ்யா அருள்மணி
செல்வி. ஜெசிந்தா தர்மசகாயம்
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்
செல்வி. ஷேர்லி ஸ்ரீனிவாசன்
செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
செல்வி. ஜெஸ்வின் ஆ. யேசுதாஸ்
செல்வி. அபியா செல்வி தர்மர்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
செல்வன். ஜோஷ்வா பால் பாண்டியராஜ்
செல்வன். ரையன் சாமுவேல் ஜான்சன்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
செல்வன். சிசில் செல்வதாஸ்
சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. சுதா மனோகரன்
சகோதரி. சிஜோ ஸ்ரீதர்
சகோதரி. ஆஸ்லி முத்தையா
சகோதரி. கீதா ஜெயக்குமார்
சகோ. அருள்மணி
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
சகோ. ஜெயக்குமார்
சகோ. சாமுவேல்
சகோ. ஜாண் மில்லர்
சகோ. விசு
சகோ. ஜாண்போஸ்கோ
சகோ. யேசுரெத்தினம்
சகோ. முத்தையா
சகோ. ராஜா ரவிச்சந்திரன்
சகோ. லாசர் ராஜமணி
சகோ. பால் டேனியேல்






## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. ஆசீர்வாதம்
திருமதி & திரு. லாசர் ராஜமணி
திருமதி & திரு. சுகுமார்
திருமதி & திரு. சத்தியநாதன்

# 2015 மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 1/3/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ.இயேசு நாயகம் |
| 08/03/2015 | சகோ.அற்புதராஜ் | சகோ.ரவி ஜான் பீட்டர் |
| 15/03/2015 | சகோ. ஸ்டாலின் | சகோ.அசோக்குமார் |
| 22/03/2015 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ.ஜெயசேகர் |
| 29/03/2015 | குருத்தோலை ஞாயிறு | |
| | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ.ஸ்டாலின் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:30 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/03/2015 | சகோ. எபிநேசர் | சகோ.ஸ்டீஃபன் |
| 13/03/2015 | சகோ. ஜசக்துரை | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |
| 20/03/2015 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/03/2015 | குடும்ப ஆராதனை | |
| | திருச்சபையின் சிறுவர் சிறுமியர் | சகோ. ஆசீர்வாதம் |

12/03/2015 முழு இரவு ஜெபம் இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி ) குவைத் .

27/03/2015 அன்று வாலிப ஐக்கிய கூடுகை மாலை 7 மணிக்கு
இடம் : புதிய ஜெப வீடு (பாஹுல்)

சகோதரிகள் ஐக்கிய கூடுகை – இடம், நாள், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

# 2015 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவும்

1. பெலிஸ்தரின் வெள்ளாண்மையை சுட்டெரித்து போட்ட நியாதிபதிகள் யார்?

2. ஒரு கழுதையின் பச்சை தாடை எலும்பால் பெலிஸ்தரில் ஆயிரம் பேரைக் கொன்றவன் யார்?

3. ஒரு தாற்றுக்கோலால் பெலிஸ்தரில் அறுநூறு பேரை முறியடித்தவன் யார்?

4. ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை சங்கரித்த நியாயாதிபதி யார்?

5. பரஸ்திரியின் குமாரன் ஆனாலும் விசுவாச வீரன் இவன் யார்?

6. தன் வேலைக்காரன் பட்டயம் உருவி குத்தினதால் செத்து போன ராஜா யார்?

7. நூதன தேவர்களை தெரிந்து கொண்டவர்கள் யார்?

8. புறஜாதிகளுடைய பட்டணமாகிய ஆரோசேத்திலே குடியிருந்த சேனாதிபதி யார்?

9. போர்களத்து முனையில் தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்கு துணிந்து நின்ற இருவீரர்கள் யார் யார்?

10. கர்த்தர் தன்னை விட்டு விலகினதை அவன் அறியாதிருந்தான் அவன் யார்?

11. பலி பீடத்தின் ஜீவாலையில் வானத்துக்கு ஏறிபோனவர் யார்?

12. முந்நூறு நரிகளை பிடித்தவன் யார் ?

13. ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் அவள் யார்?

14. புது கயிறுகளால் கட்டப்பட்டவன் யார்?

15. இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும் இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய் போயின என்றவள் யார் ?

விடைகளை வருகின்ற 20-03-2015 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொறுப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

விடைகளை **நியாயாதிபதிகள்** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

## உலகின் வழி

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள், கடந்த மாத இதழின் தொடர்ச்சியாக வாலிப சகோதர சகோதரிகளின் பரிசுத்த வாழ்க்கையை பிசாசானவன் எப்படி தட்டி பறிக்க வழிதேடுகிறான் என்பதை தொடர்ந்து பார்த்து வருகிறோம். கடந்த மாதம் தாவீதை குறித்து தியானித்தோம் இந்த மாதம் யூதாஸை பற்றி பார்க்க தேவன் கிருபை புரிவாராக!

ஒரு சின்ன கதை நினைவுக்கு வருகிறது. ஒரு கழுகு மலையுச்சியிலிருந்து கிழே பறந்து வந்து ஒரு ஆட்டு குட்டியை தூக்கி சென்றதை ஒரு காகம் பார்த்து கொண்டிருந்தது. உடனே காகம் ஒரு கணக்கு போட்டது எவ்வளவு, எவ்வளவு சுலபமாக உணவை பெற முடிகிறது நாம் ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும் என்று நினைத்து மாம்ச இச்சையில் விழுந்தது, தேடி அலைந்து ஒரு ஆட்டுகிடாவை கண்டது அதுவே தனக்கு ஆகாரம் என்று சொல்லி அதன் மீது பறந்து வந்து உட்கார்ந்து தன் கால்களை அதன் ரோமத்தின் மீது பதித்து அந்த செம்மரி ஆட்டை தூக்கி கொண்டு பறக்க முயற்சி செய்தது, என்ன ஒரு பரிதாபம் அதன் அறியாமையால் அதன் நகங்கள் ஆட்டின் ரோமத்தில் சிக்கி கொண்டு பறக்க முடியாமல் தவித்தது, இப்பொழுது உணவு ஆசை விட்டு நீங்கி உயிரை பாதுகாத்துக்கொள்ள அது பரிதவித்தது ஆனால் விளைவு மேய்ப்பன் வந்து அதன் சிறகை முறித்து தன்னுடைய பிள்ளைகளுக்கு விளையாட்டு பொருளாக்கி கொண்டான்.

பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே! இது கதையாக தோன்றலாம் ஆனால் இந்த வாலிப பிராயத்தில் அநேகர், மாம்ச இச்சையில் சிக்கி அதில் இருந்து மீள முடியாமல் தவிக்கிறார்கள்.முடிவு சாத்தான் அவர்களை ஆண்டவரை மறுதலிக்கவும், அவரை விட்டு தூரம் போயும், தேவனுடைய நாமத்தை தூஷிப்பது மட்டுமின்றி தன்னுடைய ஆன்மாவையும் கெடுத்து கொள்கிறார்கள். நான் முன்பு கூறியது போல யூதாஸை குறித்து பார்ப்போம்.

## யூதாஸ்

ஆண்டவருடய சீடரான யூதாஸை குறித்து பாருங்கள், அவனுடைய வாழ்க்கையை எடுத்து கொண்டால், இயேசு இவ்வுலகில் இருந்த நாட்களில் ஆயிரக்கணக்கான மக்கள் அவரை பின் தொடர்ந்து சென்றனர். அவரது உபதேசங்களை கேட்க பல இடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்தனர். அவருக்கு அவ்வளவு புகழ்ச்சி!, அவருக்கு பொக்கிஷதாரியாக இருந்தவன்தான் இந்த யூதாஸ். இவ்வுலகில் அனைவரும் ஒருவனை எதற்கும் நம்புவார்கள் பண விஷயத்தில் மாத்திரம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பார்கள். ஆனால் இயேசுவோ இவ்வுலகின் பொக்கிஷங்களை, தனக்கு கிடைத்த காணிக்கைகள் எல்லாம் யூதாஸை நம்பி அவன் கையில் ஒப்படைத்திருந்தார். இயேசுவை அறிந்த மக்கள் அனைவரும் இவனையும் நன்றாக அறிந்திருந்தனர். மற்ற சீஷர்களுக்கு இல்லாத முக்கிய பண பொறுப்பு அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அவன் சென்ற இடமெல்லாம் அவ்வளவு புகழ்! அவன் இயேசுவோடு அப்பம் புசித்துகொண்டிருந்தான்(மாற்கு 14:18) ஒரு முறை ஒரு ஸ்திரி, விலையேற பெற்ற நளதம் என்னும் உத்தம தைலத்தை வெள்ளைகள் பரனியை உடைத்து அவர் சிரசின் மேல் ஊற்றினாள் அதை பார்த்து கொண்டிருந்த சீஷர்களில் சிலர் விசனமடைந்து தப்பான எண்ணம் கொண்டு "இயேசுவுக்கு இந்த தைலத்தை வீணாய் செலவழிப்பானேன்! இதை முந்நூறு பணத்துக்கு அதிகமானகிரயத்துக்கு விற்று தரித்திரத்திற்கு கொடுத்திருக்கலாமே என்று சொல்லி முறுமுறுத்தார்கள், அவர்களில்

அவர்களில் யூதாஸும் ஒருவன்! அவர்களுக்குள் திடீரென்று வாக்குவாதம் உண்டாயிற்று! இயேசு அவர்களை நோக்கி "அவளை விட்டு விடுங்கள்" ஏன் அவளை தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள். இவள் தன்னால் இயன்றதை செய்தாள் என்று சொன்னார் (மாற்கு 14:3-8) அதை கேட்ட யுதாஸ் எழுந்து அவரை பிரதான ஆசாரியருக்கு காட்டி கொடுக்கும்படி அவர்களிடத்திற்கு போனான். (மாற்கு 14:10) பிசாசுக்கு பிசாசின் கிரியைகளுக்கு மனதில் இடம் கொடுத்தான். பிசாசு அவனுக்குள் புகுந்தான், (யோவான் 13:2:27)அவன் எப்பொழுது இயேசுவை காட்டி கொடுக்கலாம் என்று தகுந்த சமயம் பார்த்து கொண்டிருந்தான் என்று வேதம் கூறுகிறது. மனுஷகுமாரன் தேவனுடைய சித்தத்தின்படியே மக்களுக்காக மரிக்கபோகிறார், ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக் கொடுக்கபடுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ! இந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் இவனுக்கு நலமாயிருக்கும் என்றார் இயேசு (மாற்கு 14:21).

பணம் என்னும் சோதனையின் மூலம் பிசாசானவன் அவன் வாழ்வில் புகுந்து குற்றமற்ற ரத்தத்தை காட்டி கொடுத்து விட்டான், நமக்கு பணம் கிடைக்கும். அவர் தம்மைக் கொலை செய்ய வேண்டுமென்றிருந்த மக்கள் முன் கடந்து சென்று விட்டதை போன்று இப்போதும் போய் விடுவார், அவர்கள் கைக்கு தப்பிவிடுவார் இதனால் அவருக்கு எந்த சேதமும் ஏற்படாது, எனக்கும் லாபம் என பாவ எண்ணத்தை, பிசாசு அவனுக்குள் போட்டிருப்பான், அந்தோ தேவ பிரசன்னத்தை இழந்தான் தனிமை உணர்வு அவனை வாதித்தது. கொடியவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து விட்டார்கள் என்ற செய்தியை கேள்விபட்டதும், யூதாஸின் மனம் உடைந்தது அவன் செய்த பாவம் அவன் இருதயத்தை நொறுக்கியது, செய்வதறியாது தன் உயிரை மாய்த்து கொண்டான்.

ஆம் இன்றும் நிம்மதி இழந்து அவனது ஆத்துமா நரகத்தில் தவித்து கொண்டிருக்கிறது. ஏன் அவன் இயேசுவின் சீடன்தானே! அவனுக்கு எதற்கு அந்த கதி? என நீங்கள் கேட்க கூடும், இவன் இயேசுவை காட்டி கொடுத்த பின்புதான் தன் தவறை உணர்ந்தான் அந்தோ பரிதாபம்!

ஒரு இடத்தில் தகைவிலான் குருவிகள் கூட்டமாக, விவசாயி ஒருவன் சணல் விதை விதைப்பதை பார்த்து கொண்டிருந்தன! அதில் வயது முதிர்ந்த ஒரு குருவி "நாம் அந்த விதைகளை எல்லாம் பொறுக்கி அவைகளை அழித்துவிட்டால் நாம் பிழைப்போம்" என்று சொன்னது. ஆனால் மற்ற குருவிகளோ " அவைகள் முளைக்கட்டும் இதனால் நமக்கு என்ன கவலை ? பின்பு பார்த்து கொள்ளலாம்" என்றன! சில நாட்களுக்குள் விதைகள் முளைத்து, வளர்ந்து, சணலாக மாறின! மீண்டும் விதைகளை விதைத்தவன் அதிலிருந்து சணலை எடுத்து, கயிறாக முறுக்கி, அக்கயிறை வலையாக பின்னி, அவ்வலையை வயல்வெளியில் விரித்த போது, இதே குருவிகள் அனைத்தும் அந்த வலையில் சிக்கி கொண்டன அப்பொழுதான் அவைகளின் கண்கள் திறந்தன! ஐயோ இந்த செடியை வளரவிடாமல், விதைகளை விதைக்கும் போதே அவைகளை நாம் அழித்திருந்தால், நாம் இதில் சிக்கி இருக்கமாட்டோமே" என்று கதறின பயன் என்ன? எல்லா குருவிகளும் அழிந்து போயின.

இப்படிதான் பிசாசும் தம் உள்ளத்தில் தீமையான எண்ணங்களை, பாவ காரியங்களை விதைத்துவிடுகிறான். அநேக முறை நாம் அதை தவிர்க்காமல் நமக்குள் பெருக செய்கிறோம் முடிவில் அது நம்முடைய வாழ்க்கையை அழித்து போடுகிறது,

யூதாஸின் வாழ்க்கை நமக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும்

அடுத்த இதழில் பேதுருவை குறித்து பார்ப்போம் .

( தொடரும்)

# ஜாண் அண்டர்சன் (1802–1855)

18–ம் நூற்றாண்டில் ஆவலியானவரின் தொடுதலால் ஏராளமான அயல்நாட்டு மிஷனெரிகள் பாரத மண்ணில் கால் பதித்து, சாதனை படைத்தனர். சீகன் பால்க், புளுச்சோ போன்றோர் தரங்கம்பாடி வந்து கல்வி பயில ஆரம்ப பாடசாலை நிறுவி சிறுவர், சிறுமியரின் அகக்கண்களைத் திறந்தனர். 9–ஆம் நூற்றாண்டில் தொடர்ந்து வந்த மிஷனெரிகள் கல்வி அறிவில்லாத இந்தியர்களுக்கு உதவ பாடசாலைகளையும், மேற்படிப்பிற்கான கல்லூரிகளையும் நிறுவினர். 1818–ல் வில்லியம்கேரி, ஜான்வா மார்சுமென், வில்லியம் வார்டு போன்றவர்கள் பாப்பிஸ்து மிஷனெரி சங்கம் மூலம் கொல்கத்தா அருகே செராம்பூரில் ஒரு கல்லூரியை நிறுவி, அங்குப் பேசப்படும் வங்காள மொழியையே போதனை மொழியாக்கினர். 1830–ல் ஸ்காட்லாண்டு திருச்சபை மூலம் அனுப்பட்ட மிஷனெரி அலெக்சாண்டர் டப் கொல்கத்தாவில் வில்லியம் கேரியின் ஆசியுடன் ஒரு ஆங்கிலக் கல்லூரியை நிறுவினார். இந்திய நாட்டின் தேவையை உணர்ந்த அலெக்சாண்டர் டப், ஸ்காட்லாண்டு திருச்சபையின் பொதுச்சபையில் இந்தியர்களின் கல்வித் தேவையைக் கூறி இன்னும் அதிகமான மிஷனெரிகள் அறிவுக்கண்ணைத் திறந்து கல்லாமையை நீக்க வேண்டியதன் அவசியத்தைக் கூறினபோது, திருச்சபைத் தலைவர்கள் கண்ணீரோடு ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் அவருடைய உரையை 20000 பிரதிகள் அச்சிட்டு சபைகளுக்கு அனுப்பினார்கள். இதன் பிரதி ஒன்று ஜாண் அண்டர்சன் என்று இளைஞன் கரத்தில் கிடைத்தது. இந்த வாலிபன் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். பெலவீன சரீரமுடையவன், தந்தையோ கண் தெரியாதவர். எனினும் 21 வயதில் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் புராண இயல் மற்றும் இறையியலில் சிறந்த மாணவனானார். இந்திய தேசத்தின் கல்வித் தேவையினை வாசித்த அண்டர்சன் உள்ளம் கொழுந்துவிட்டு எரிய, இது தேவனுடைய அழைப்பு என தீர்மானித்தார்.

1836–ல் கொல்கத்தா வந்து, டப் நடத்தி வந்த கல்விச்சாலைக்குச் சென்று, கல்வி தொண்டு செய்யும் விதத்தைக் கற்றுக்கொண்டார். பின்பு சென்னையில் 1837–ல் ஒரு வாடகை வீட்டில் ஸ்காட்லாண்டு திருச்சபை சார்பாக ஒரு கல்விச் சாலையை சென்னையில் ஏப்ரல் 3–ம் தேதி ஆரம்பித்தார். தென்னிந்தியாவிற்கு ஸ்காட்லாண்டு திருச்சபை கல்வித்தொண்டு செய்ய அனுப்பிய முதல் மிஷனெரி இவர்தான்.
இந்த ஆரம்பத்தின் விளைவாக இன்று சேத்பட்டிலுள்ள சென்னை கிறிஸ்தவ கல்லூரி பள்ளி மற்றும் தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவ கல்லூரியாகும். சென்னை உயர்நீதி மன்றத்திற்கு எதிரில் அவருடைய பெயரில் அமைந்துள்ள ஆலயம் இன்றும் அவருடைய ஊழியத்திற்கு சான்றாக விளங்குகிறது. 1841–ம் ஆண்டு ஜாண் பிரைய்டு உட் என்பவர் ஜாண் அண்டர்சனுக்கு உதவியாக இந்தியா வந்தார். இங்கிலாந்து தேசத்திலிருந்து கொண்டுவந்த உபகரணங்கள் மூலம் கல்விச்சாலையில் வேதியியல் ஆய்வுக் கூடத்தை நிறுவினார். இவர் எழுதிய “உண்மையான நுகம் என்ற புத்தகத்தில் அன்றைய ஸ்காட்லாண்டு தேசத்தில் பற்றிய எழுப்புதலைப்பற்றிக் கூறியது. இறையியல் கல்லூரியில் படித்து முடித்த மாணவர்கள், அந்தஸ்துள்ள மதிப்பிற்குரிய திருச்சபை போதகர்களாக விரும்பாமல், ஆவியானவரின் உந்துதலினாலே, எங்கள்

மீட்பரின் மகிமைக்காக நாங்கள் எங்கு செல்லவும், என்ன செய்யவும் ஆயத்தம் என அர்ப்பணித்திருந்தனர். தேவனால் தொடப்பட்ட மாணவர்கள் மத்தியில் ஜெபிக்கவும், வேதத்தை வாசிக்கவும், தியானிக்கவும், குழுவாக கற்கவும் ஒரு எழுப்புதல் ஏற்பட்டது.

அதுமட்டுமல்லாமல் இம்மாணவர்கள் கல்வியில் முதன்மையாக விளங்கி, பரிசுகளையும், உதவித் தொகைகளையும் பெற்று தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். விசுவாசம் என்பது தனி நபருக்குரியதாயிருப்பினும் அதன் விளைவு அனைவருக்கும சொந்தம் என்ற கோட்பாடோடு செயல்பட்டனர். சீஷத்துவ வாழ்விற்கு தியாகம் அவசியம் அதைவிட உலகளவில் தேவனுடைய நாமம் அறிவிக்கப்படவும், கிறிஸ்துவின் பெயர் மகிமைப்படவும் வேண்டியதின் அவசியத்தை வேதத்தின் வாயிலாக கற்றறிந்தனர்.

1837-ல் அண்டர்சன் கற்ற வேதாகமக் கல்வி அவருடைய விசுவாசத்தை வளரச் செய்து, உறுதிப் படுத்தி பிற்கால ஊழியத்திற்கு அடித்தளமாக இருந்தது. அன்றைய இந்தியாவில் ஜாதி துவேசம் மிகுந்து காணப்பட்டாலும், ஜாண் அண்டர்சன் இந்து உயர் ஜாதிகள் தாழ்த்தப்பட்டவர்கள் என ஒதுக்கிய மூன்று மாணவர்களை தன் பள்ளியில் சேர்த்துக் கொண்டார். ஜாதி தீண்டாமை இவைகளுக்கு அப்பாற்பட்டவராக இருந்து கல்வி பயில அனைவருக்கும் சமமான உரிமையைக் கொடுத்தார். பல்வேறு ஜாதி சமய மாணவர்கள் ஒன்றாக பயிலவும் சமுதாய சீர்திருத்தத்திற்கும் காரணமாக இருந்தது இந்த சென்னை கிறிஸ்தவ கல்லூரி. 1841-ம் ஆண்டு இராஜகோபால், வெங்கட்ராமையா என்ற இரு மாணவர்கள் ஆண்டவரை ஏற்று திருமுழுக்குப் பெற அனைத்து உதவிகளையம் அண்டர்சன் செய்தமையால் பெரிய எதிர்ப்புக்குள்ளானார். ஜாண் அண்டர்சன் மதமாற்றத்தை செய்யவில்லை, ஆதரிக்கவில்லை ஆனால் தனி மனிதன் சுயமாக சத்தியத்தை அறிந்து அதை ஏற்றுக்கொண்டால் அந்த உரிமையை யாருக்கும் மறுக்கக்கூடாது. இது தேவனுடைய செயல் என்றும் நம்பினார். ஜாண் அண்டர்சன் இந்த மிக முக்கிய கல்வியை மக்களுக்கு கொடுக்க 1838-ல் காஞ்சிபுரத்திலும், 1840-ல் செங்கல்பட்டிலும் பாடசாலைகளை உருவாக்கினார். மேலும் திருவள்;ர், இராயபுரத்தில் பெண்களுக்காகவும் பாடசாலைகள் ஆரம்பித்தார். பல்லாயிரக்கணக்கான மக்களை கல்லாமை, அறியாமை போன்றவைகளில் இருந்து விடுவித்து பண்புள்ள குடிமக்களாக உருவாக்கியுள்ளார் ஜாண் அண்டர்சன்.

இன்று இந்தக் கல்வி நிலையங்கள் உயர்நிலை கல்வியின் முன்னோடிகளாக புகழ்பெற்று திகழ்கின்றன. இக்கல்லூரிகளில் பல்லாயிரக் கிறிஸ்தவ இளைஞர்கள் பயின்று, திருச்சபை தலைவர்களாக, இன்னும் சமுதாயத்தில் உயர் பதவிகளில் இருந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்துகின்றனர். பல ஊழியர்கள் இப்பாடசாலையின் மூலம் எழும்பியுள்ளார்கள். மாணவர்களை நற்செய்தி பணியில் ஊக்குவிக்கும் ஆசிரியர் இன்று நமது நாட்டிற்கு தேவை. ஜாண் அண்டர்சன் போன்று உயர்ந்த இலட்சியத்துடன், தியாகத்துடன் வாழ்ந்து பல்லாயிரம் கிறிஸ்தவ மாணவர்களை உருவாக்க இந்த நாடு காத்திருக்கிறது.

தொகுப்பு

**சகோ. சுகுமாரன்**

# கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டேன்!

### "கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன்
### இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா 2:20)

கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்படுவது என்றால் என்ன? அவர் 2000 ஆண்டுகளுக்கு முன் சிலுவையிலே பட்ட பாடுகளோடு நாம்நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வதேயாகும். இது ஒரு உணர்வுப்பூர்வமான அனுபவம். முதலாவதாக நம்மை இரட்சிப்பதற்காகவும் இரண்டாவதாகபாடுகளைச் நாம் சுமந்து எப்படி நம்மையே தாழ்த்த வேண்டும் என்ற முன் மாதிரியைக் நமக்குக் காட்டுவதற்காகவுமே இயேசு சிலுவையைச்சுமந்தார்.

""கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும் படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" – என்று I பேது 2:21 கூறுகிறது. ஆயினும் விசுவாசிகளாகிய நமக்கோ கிறிஸ்து மட்டும் வேண்டும் சிலுவையோ வேண்டாம்.

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிறயாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோ 3:12). ஒருவன் இயேசுவைப் பின்பற்ற விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து,தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றவேண்டும் (மத் 16:24). மேற் கூறிய வசனங்களெல்லாம் நமக்கு போதிப்பதென்ன? நாம் எல்லோரும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சிலுவையை தேவநாம மகிமைக்கென்று பொறுமையோடே சுமக்க வேண்டுமென்பதையே.

இயேசுதன் சிலுவைப் பாடுகளின் மூலம் நமக்குக் கற்றுத் தரும் சத்தியங்களில் சிலவற்றை நாம் இங்கு தியானிப்போம்.!

## 1. அநீதியாய்நியாயந்தீர்க்கப்பட்டார்: (மத் 27:22 23)

இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று ஜனங்கள் கூக்குரலிட்டார்கள். இந்தத் தீர்ப்படைவதற்கு அவர் பாத்திரராயிராதிருந்தும் அவரைச் சிலுவையில் அறையும்படி பிலாத்து தீர்ப்பு செய்தான். அவன் மனைவியோ, "இயேசு நீதிமான்"என்று அறிக்கையிட்டாள். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், "இயேசுகுற்றமில்லாதவர்" என்றுஅறிக்கையிட்டான். அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வனோ "'இயேசு தகாததொன்றையும் நடப்பிக்காமலேயே தண்டிக்கப்படுகிறார்" என்று அறிக்கையிட்டான். இப்படி இயேசு நீதிமானாயிருந்தும், அவருக்கு அநீதியான தீர்ப்பு கொடுக்கப்பட்டது. பிரியாமனவர்களே! நமக்கும், இந்த உலகத்தில் வாழும்வரை குடும்பத்தினரால், உறவினர்களால், நண்பர்களால் உடன் வேலை செய்பவர்களால் பல வகையிலும் அநீதியான நியாயத்தீர்ப்புகள் செய்யப்படும். அந்நேரங்களில் நாம் எப்படி நடந்துக் கொள்கிறோம்? இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி அவர் சகித்தது போல நாமும் பொறுமையாய் சகித்துக் கொள்கிறோமா?

## 2. நம் சுமைதாங்கியானார்: (யோவான் 19:17)

கடுமையான வெயிலில் தோளின் மேல் பாரம் அழுத்த, சிலுவையைச் சுமந்துக் கொண்டு இயேசு மலையின் மேல் ஏறினார். போர்ச் சேவகரின் சாட்டையடியினால் உண்டான வலி ஒரு புறம் தன் பிதாவின் பிரிவினால் உண்டான வேதனை மறுபுறம். வேதம் சொல்லுகிறது "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளையும், துக்கங்களையும் சுமந்தார்" என்று. அவர் நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட போதும் தம்முடையவாயைத் திறவாதிருந்தார். நமக்கும் பலவேளைகளில் குடும்பத்திலும். வேலைஸ்தலத்திலும், ஊழியத்திலும் மற்றவர் பாரங்களைச்சுமக்கவேண்டிய சூழ்நிலை நேரிடும். அத்தகைய சூழ்நிலைகளில் பாரங்கள் நம்மை அழுத்தும் போது "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாத படிக்கு தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்" என்ற வசனத்தை நினைவு கூர்ந்தவர்களாய் அச்சுமைகளை பாரமாக எண்ணாமல் பொறுமையாய்ச்சுமக்கிறோமா?

## 3. உடலிலும் உள்ளத்திலும் பலவீனப்படுத்தப்பட்டார்: (மத்:27:28-31)

அவர் உடலிலிருந்த இரத்தமெல்லாம் அந்த கொல்கொதா மலையிலே சிந்தப்பட்டது. சிலுவை மரணம் என்பது ஒரு சாதாரண மரணமில்லை. அணு அணுவாய் சித்தரவதை அனுபவித்து சாவை சந்திப்பதாகும். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரைவலியும் வேதனையும் அடைந்தார். அதுமட்டுமல்ல ஒருகள்வனைப் பிடிப்பது போல பிடித்து, கள்வர்கள் மத்தியிலே அறைந்தனர். அவர் மேல் துப்பி,பரியாசம் பண்ணி, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, முள் முடியை சிரசில் வைத்து,கசப்பானக் காடியைக் குடிக்கக் கொடுத்தனர். அவர் எல்லா அதிகாரமும் உடையவராயிருந்தும், நமக்காக எல்லாப் பாடுகளையும் சகித்தார். இப்படியாய் இயேசு நமக்காக அநேக தியாகங்களைச் செய்திருக்க, அவர் நமக்கு ஒப்புவித்த சுவிசேஷம் சொல்லும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கென்று நாம் எடுத்த பிரயாசங்கள் என்ன? செய்த தியாகங்கள் தான் என்ன? "என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன் இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவே விரும்புகிறேன்"என்ற பவுலின் வைராக்கியம் நம்மைப் பற்றிப் பிடிப்பதாக!

## 4.சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்தப்பட்டார்: (பிலி 2:8)

இயேசுவே தாழ்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தாழ்மையிலேப் பிறந்தார். சிலு-வையில் மரிக்கதன்னைத் தாழ்த்தி பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.சீடரின் கால்களைக் கழுவி,தான் ஊழியம் கொள்ளவராமல், ஊழியம் செய்யவே வந்தேன் என்பதை இயேசு நமக்கு பிரத்தியட்சமாகக் காண்பித்தார். இப்படியிருக்க, தேவன் நமக்கு கொடுத்திருக்கும் கல்வி, பணம், வேலை,ஊழியம் இவற்றை பயன்படுத்துகையில், இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி, அவருக்கு பிரியமான தாழ்மையின் வழியில் நடந்து கொள்ளுகிறோமா?

நாம் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டது உண்மையானால் அவருடைய பாடுகளோடே நம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்களாய் அவர் காட்டிச் சென்ற வழியில் நடப்போம்.அப்பொழுது பவுல் சொன்னது போல, அவரோடே பாடுகளைச்சகிப்பதினால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்.அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

**பிரியா பிரேம்குமார்**

# சிறுவர் வேதாக பள்ளி குழந்தைகள் ஆராதனை





## குறுநாடகம்

## தேர்வுக்கு முந்தைய ஜெபம்





## சாட்சிகள்





## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்


**தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்**

23913675 - 66889706

**செயலாளர் – சகோ. ஜெயசேகர்**

23711698 - 96646444

**பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்**

99870126

**பெண்கள் ஐக்கிய தலைவி**

**சகோதரி. ஜெயக்கொடி ஜான் வெஸ்லி**

23731904 - 99145593

**வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்**

60692485

Church Website Address : www.ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no: 46795, 64018, fahaheel ,Kuwait


தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only